# மாலை முரசு

பக்கங்கள் 13

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | தை 06 | சனிக்கிழமை | 20.01.2024 | அதிர்வு 173


## பன்னங்கண்டி பகுதியில் இளைஞரின் சடலம் மீட்பு



(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி, பன்னங்கண்டி பகுதியில் இளைஞர் ஒருவரின்

04▶



# தோல்வியை எதிர்பார்ப்பவர் கடைசி நேரத்தில் வாபஸ்?

## அடுத்த இரு வருடங்களின் பின்னர் தமிழரசின் தலைமையைப் பெறுவதற்குத் தந்திரத் திட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் தோல்வி தனக்கு நிச்சயம் என்று கருதும் வேட்பாளர் ஒருவர் கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகவுள் ளார் என்றும், இந்த வாபஸ் அறிவிப்பு மூலம் அடுத்த இரண்டு வருடங்களின் பின்னர் தலைவர் பதவி தனக்குக் கிடைக்கும் என்ற உறுதி மொழியை அவர் பெற்றுக்கொள்ளத் திட்டம் போட்டுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

04▶

# யாழ். நகரில் கடைகள், சொத்துக்களை எரிக்க பெல்ஜியத்தில் இருந்து 12 இலட்சம் ரூபா 'டீல்'

## மூவர் வசமாகச் சிக்கினர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலுள்ள பிரபல்யமான ஆடை விற்பனை நிலையங்கள், கார் மற்றும் வீடுகளை எரித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பதில் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள இரண்டு கடைகள் அண்மையில் எரிக்கப்பட்டன. 2 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் இதன் போது எரிந்து அழிந்தன. அத்துடன் கார் ஒன்றும்

04▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



## தென்னாபிரிக்க ஜனாதிபதி உட்பட

# அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்றுள்ள பல்வேறு அரச தலைவர்களுடன் ரணில் சந்திப்பு

உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு இணைந்த வகையில் ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள உலகளாவிய தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று (19) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தென்னாபிரிக்க ஜனாதிபதி மிகவும் அன்புடன் வரவேற்றதுடன் இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதேவேளை, தன்சானியா பிரதமர் காசிம் மஜலிவாவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இருதரப்பு பேச்சில் ஈடுபட்டார்.



மேலும், பஹமாஸ் பிரதமர் பிலிப் ஈ. டேவிஸ், எத்தியோப்பியா பிரதமர் அபே அஹமட், பெனின் குடியரசின் உப ஜனாதிபதி மாரியம் சாபி தலதா ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து, இரு தரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான கிங்ஸ் நெல்சன், நிமல் பியதிஸ்ஸ, குமாரசிறி ரத்நாயக்க, உதயகாந்த குணதிலக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் இந்தச் சந்திப்புக்களினபோது உடனிருந்தனர்.









# நாரம்மல துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு

## பொலிஸ் அதிகாரிகள் இருவரும் பணி நீக்கம்



குருநாகல், நாரம்மல பகுதியில் பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த லொறிச் சாரதியின் உறவினர்களுக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சாரதியின் அலவ்வ பகுதியில் உள்ள வீட்டில் வைத்து பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இந்தத் தொகையை இன்று வழங்கினார்.

குடும்ப உறுப்பினர்களை அவர் சந்தித்து ஆறுதல் கூறியதுடன், உயிரிழந்தவரின் உடலுக்கும் அஞ்சலி செலுத்தினார்.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் விசாரணை முடிவடையும் வரை பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி இருவரும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.



# பிணத்தை வைத்து பிழைப்பு நடத்திய மாநகர சபைப் பணியாளர் மாட்டினார்

## ஜனவரி 30ஆம் திகதி வரை விளக்கமறியல்

மாத்தளை பிரதேசத்தில் தகனக் கிரியைகளின்போது பண மோசடி இடம்பெறுகின்றது எனக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுகளை அடுத்து மாநகர சபைப் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இடுகாட்டில் தகனக் கிரியைகளின் போது , சடலமொன்றுக்கு மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது என்று தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட மாத்தளை மாநகர சபைப் பணியாளர், மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட பின்னர் இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

மாத்தளை மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் வசிப்போரிடம் தகனக் கிரியைகளின் போது 20 ஆயிரம் ரூபாவும், மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்படாத பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடம் சடலமொன்றுக்கு 25 ஆயிரம் ரூபாவும் அறிவிடப்பட வேண்டும்.

எனினும், மாத்தளை மாநகர சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசங்களில் சடலத்தை எரியூட்டுவதற்கு 25 ஆயிரம் ரூபா என்றடிப்படையில் போலியான பற்றுச்சீட்டுகளைத் தயாரித்து, அதனூடாக சடலமொன்றுக்கு 5 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் சந்தேகநபர் மோசடி செய்துள்ளார்.

இதன்படி இவர் இதுவரை 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மோசடி செய்துள்ளார் என்று தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



### மோடியின் இராமேஸ்வர வருகையையொட்டி

# இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இராமேஸ்வர வருகையை யொட்டி இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீனவர்கள் அனைவரையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை இடம்பெறுகின்றது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 40 மீனவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா சிறை களில் விளக்கமறியலில் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையே விடுவிக்க முயற்சிக்கப்படுகின்றது.

இம்மாதம் 26, 29, 30ஆம் திகதி கள் வரையில் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள மீனவர்களின் வழக்குகளை நடத்தி மீனவர்களை விடுவிக்க நடவ டிக்கை எடுக்க அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டுள்ளன.

இன்றும் நாளையும் நீதிமன்றங்கள் விடுமுறை தினம் என்பதால் கடற்றொ ழில் திணைக்கள அதிகாரிகள் நீதிமன் றப் பதிவாளர்கள் மூலம் இந்த விடயத்தை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

வழக்குக் கோவைகள் மற்றும் இதர பணிகளுக்கான நீதிமன்றின் ஏனைய பணியாளர்கள் உட்பட அனைவரையும் அழைப்பதில் தடை ஏற்பட்டால் இந்திய மீனவர்களின் விடுவிப்பு எதிர்வரும் திங்கட்கிழமையே இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தோல்வியை...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவரைத் தெரிவு செய்வதற் கான தேர்தல் நாளை திருகோணமலை யில் நடைபெறவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் தலைவர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர். கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள் இரகசிய வாக் கெடுப்பு மூலம் புதிய தலைவரைத் தேர்வு செய்யவுள்ளனர்.

இந்நிலையில், இந்தத் தேர்தலில் தோல்வி தனக்கு நிச்சயம் என்று கருதும் வேட்பாளர் ஒருவர் கடைசி நேரத்தில் போட்டியில் இருந்து விலகிக்கொள்வதற் குத் திட்டமிட்டுள்ளார் என்று தெரியவரு கின்றது. தனக்கு ஏற்படும் தோல்வியைத் தவிர்ப்பதற்காகவே அவர் இந்த முடிவை எடுக்கவுள்ளார் என்றும் அறியமுடிகின் றது. அதன்மூலம் எதிர்வரும் இரண்டு வருடங்களின் பின்னர் அடுத்த தலைவர் பதவி தனக்குக் கிடைக்கும் என்ற உறுதி மொழியை மேற்படி வாபஸ் அறிவிப்பு மூலம் பெற்றுக்கொள்ளலாம் என அவர் திட்டம் போட்டுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதி ராஜா தான் நினைத்தவாறு, கட்சியின் பொதுச் சபையில் அங்கம் வகிக்காத இளைஞர், யுவதிகள் பலரை நாளை நடைபெறவுள்ள புதிய தலைவரைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்து வருகின்றார் என்றும் அறியமுடிகின்றது. மாவை சேனாதிராஜாவின் இந்தத் தான்தோன்றித்தனமான நடவடிக்கை தமிழரசுக் கட்சியின் யாப்பை மீறிய செயல் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

### பன்னங்கண்டி...

சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி அ.த.க. பாடசாலைக்கு முன்பாக உள்ள கழிவு வாய்க்காலிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் மது போதையில் இருந்த நிலையில் நேற்று மாலை 7 மணியளவில் மக்களால் அவதானிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், இன்று அதிகாலை அந்த நபர் சடலமாகக் காணப்படுவது அவதானிக்கப்பட்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

மருதநகர் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஜெயராம் டினேஸ் எனும் இளைஞரே உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாட்களாக இளைஞர்களின் உயிர் இழப் புக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

### யாழ். நகரில்...

எரிக்கப்பட்டது. இதைவிட மோட்டார் சைக்கிள் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டி ருந்தது. இவை தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வந்த பொலிஸார் நேற்று மூன்று பிரதான சந்தேகநபர்க ளைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள், ஒரு வாள் என்ப னவும் மீட்கப்பட்டன.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், சந்தேகநபர் ஒருவரின் பெல்ஜியம் வாழ் பெரியம்மாவின் நட்பு வட்டாரத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தர வுக்கு அமையவே இந்த விஷமச் செய லில் அவர்கள் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

கடைகளை எரிப்பதற்காக 12 இலட்சம் ரூபா பணமும், வாகனங்களை எரிப்பதற் காக 7 இலட்சம் ரூபா பணமும் பெல்ஜியத் தின் இருக்கும் நபரிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஒன்றரை இலட்சம் ரூபா பணமும் அவர்களுடைய வங்கிக் கணக்குக்குச் செலுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து குற்றச் செயல்களின் சூத்திரதாரியான பெல்ஜியம் வாழ் நபரை இன்டர்போலின் உதவியுடன் கைது செய் யப் பொலிஸார் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளனர்.




# யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் மாநாடு

(ந.லோகதயாளன்)

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இணைந்து நடத்திய 2024ஆம் ஆண்டு மாநாடு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

வளர்ந்து வரும் தொழில் முனைவோரை வலுப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை வளர்த்தல் எனும் தொனிப்பொருளில்தொனிப் பொருளில் இந்த மாநாடு இடம்பெற்றது.

இம்மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா, வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் பாலா சுவாமிநாதன், முன்னாள் தலைவர் கால்டுவெல் வேல்நம்பி, FITEN அமைப்பின் தலைவர் கௌதம் ராஜன், ஒருங்கிணைப்பாளர்களான ஷான்




நந்தகுமார், பார்த்தீபன் பரஞ்சோதி மற்றும் Yarl IT Hub இன் ஒருங்கிணைப்பாளர் சயந்தன், மற்றும் ருடீடு இயக்குநர் ஈஸ்வரமோகன், அமெரிக்கத் தொழிலதிபர் ராஜ் ராஜரத்தினம் மற்றும் சிறுதொழில் முயற்சியாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

உள்ளூர் உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு அமெரிக்கா, கனடா மற்றும் இந்தியாவின் தமிழ்நாட்டில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையிலும், பல வெற்றி பெற்ற தொழில் வல்லுநர்களின் தொழில் அனுபவ மற்றும் அறிவுப் பகிர்வுகள் என்பவற்றுடன் உள்ளூர் தொழில் முனைவோருக்கும், வெளிநாட்டிலிருந்து வருகை தரும் தொழில் முனைவோருக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத் தும் வகையிலும் இந்த மாநாடு இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணில் ஜனாதிபதி பதவியில் நீடிக்க வேண்டும் என்பதில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் அதிகம் விருப்பமாம்

## விமல் எம்.பி. கண்டுபிடிப்பு



"ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி பதவியில் நீடிப்பதை அவரை விட இந்தியாவும், அமெரிக்காவுமே அதிகம் விரும்புகின்றன."

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

"எட்கா உடன்படிக்கையைச் கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டால் இலங்கை இந்தியாவின் மாநிலம் போல் ஆகிவிடும்."

– என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"எட்கா உடன்படிக்கை கொண்டுவரப்படக் கூடாது எனப் பல போராட்டங்கள் இடம்பெற்று, அந்த முயற்சி அன்று தோற்கடிக்கப்பட்டது. தற்போது எட்காவைக் கைச்சாத்திடுவதற்கு முயற்சி இடம்பெறுகின்றது. குறித்த உடன்படிக்கை கைச்சாத்திட்டால் இலங்கையில் சேவை சந்தைக்குள்ளும் இந்தியர்கள் வந்து விடுவார்கள். இந்திய வைத்தியர்கள் மட்டுமல்ல விவசாயிகளும் வரமுடியும்.

இது இரு நாடுகளுக்குமானது என்று கூறப்பட்டாலும் ஒரு கதவுதான் திறக்கப்படும் என்பதே உண்மை.

அதேவேளை, இந்தியாவுக்கும், மேற் குலக நாடுகளுக்கும் தேவையான அனைத்து விடயங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நிறைவேற்றி வருகின்றார். இவை தொடர்பில் அரசியல் களத்தில் பேசப்படுவதில்லை.

இலங்கை மின்சார சபையை 8 ஆக உடைத்து விற்பனை செய்யும் திட்டம் 2003 இல் கொண்டுவரப்பட்டது. தற் போது அந்த முயற்சி மீண்டும் இடம் பெறுகின்றது. சமூகத்துக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பதன் மூலம் மிகவும் சூட்சுமமான முறையில் நகர்வுகள் இடம்பெறுகின்றன. சிறு சம்பவங்களை உருவாக்குவதன்மூலம் பிரதான சம்பவங்கள் மறைக்கப்படுகின்றன.

சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கு சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. இவை தொடர்பில் மேற்குலக தூதுவர்கள் கதைப்பதில்லை. ஏனெனில் தமக்குத் தேவையானவற்றை ரணில் நிறைவேற்றுவார் என்பது அவர்களுக்கு தெரியும். கோட்டாபய ராஜபக்ச ஆட்சி காலத்தில் இப்படியான சட்டமூலங் கள் முன்வைக்கப்பட்டிருந்தால் அமெரிக் கத் தூதுவர் நாளொன்றுக்கு நான்கு ருவிட்டர் பதிவுகளையாவது பதிவிட்டிருப்பார்.

ரணிலை ஜனாதிபதி பதவியில் நீடிப்பதை அவரை விட இந்தியாவும், அமெரிக்காவுமே அதிகம் விரும்புகின்றன."

– என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஊருக்கு உபதேசம்

உலகம் நீதியின் அச்சாணியில் சுழல்வதில்லை. உலகில் நீதி, நியாயம், தர்மம், தார்மீகம் பேசும் நாடுகள் எல்லாம் தத்தம் விடயங்களில் அப்படி நீதியாக - நேர்மையாக - நியாயமாக - தார்மீகப் பண்புகளோடு - நடந்து கொள்வதில்லை.

பெரும்பாலும் அவை ஒவ்வொன்றினதும் செயற்போக்கும் 'ஊருக்கடி உபதேசம், உனக்கில்லையடி' என்ற பாணியில்தான் இருக்கும்.

மற்றைய நாடுகளுக்கும் உலகத்துக்கும் தாம் போதிக்கும் நீதியையும், நியாயத்தையும், அறத்தையும் பெரும்பாலும் தங்கள் விடயங்களில் அவை கைக்கொள்வதில்லை. பல சந்தர்ப்பங்களிலும் மாறாகவே - அதற்குத் தலைகீழாகவே - அவை நடந்து கொள்ளும்.

உலக பொலிஸ்காரனாகத் தன்னைத் தானே வரித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவிலிருந்து, நமது இலங்கை வரை இது விடயத்தில் விதிவிலக்கு இல்லை.

உகண்டாவின் தலைநகர் கம்பலாவில் நடைபெறும் அணிசேரா அமைப்பின் 19 ஆவது அரசுத் தலைவர்களின் மாநாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அங்கு நீதி போதித்திருக்கின்றார். நியாய தத்துவம் உரைத்து இருக்கின்றார்.

ஆனால் அவற்றைத் தமது நாட்டில் - இலங்கையில் - அவரோ, அவருக்கு முந்திய தலைவர்களோ கைப்பிடிக்கவேயில்லை. இனிமேலும் கைபிடிக்கப் போவதில்லை. அதற்கு மாறாகவே - தலகீழாகவே - அவரும் அவரது நாட்டின் எதிர்கால தலைவர்களும் நடந்து கொள்வர் என்பது திண்ணம்.

மத்திய கிழக்கில் மேற்குக்கரை, காசா, கிழக்கு ஜெருசலம் ஆகியவை பாலஸ்தீன நாட்டின் அங்கம் என்பது தவறாது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி அந்த மாநாட்டில் வலியுறுத்தினார். அது தப்பில்லை. சரியான கூற்று. அதை அடுத்து அவர் கூறிய இரண்டு விடயங்கள்தாம் கவனிக்கப்பட வேண்டும்.

ஒன்று -

''நாம் இங்கு சந்திக்கும் வேளையில் காஸா பகுதிகளிலும் அதற்கு அப்பாலான பகுதிகளிலும் மனிதாபிமான மோதல்கள் நீண்டுச் செல்கின்றன. மூன்று மாதங்களுக்கும் மேலாக பாலஸ்தீன சிவில் மக்கள் கடுமையான துயரங்களையும் இழப்புக்களையும் சந்தித்து வருகின்றமையோடு, வலயத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை என்பனவும் கேள்விக்குறியாகியுள்ளன.

''இதுவரையிலும் அணிசேரா நாடுகளின் அமைப்பு அமைதிகாத்தது. காஸா எல்லைகள் அழிவடையும் வேளையில் நாம் எவ்வாறு அமைதிகாப்பது? அந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவில்லை என்பதை போலவே அங்கு அதிகளவான அப்பாவி சிவில் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அமைதி காப்பதால் நாமும் அதற்கு இணக்கம் தெரிவிப்பதை போல் உள்ளது.

''இந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டின் ஊடாக காஸா பகுதிகளின் பிரச்சினைகள் தொடர்பிலும் பாலஸ்தின மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் சுயாதீனமானதும், சுதந்திரமானமான உரிமைகளை பறிக்க முடியாது என்ற விடயத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமை வரவேற்புக்குரியது.'' - என்று கூறியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இப்போது மேலாதிக்கத் திமிர்ப்போக்கில் இஸ்ரேல் படைகள் பலஸ்தீனத்தில் நடத்தும் தாக்குதலைப் போன்றே இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது இலங்கையின் அரச படைகளும் தமிழர் தேசம் மீது பேயுருக் கொண்டு இனவெறியாட்டம் நடத்தின. பேரழிவுப் பெரும்போரைத் தமிழர் தாயகம் மீது தொடுத்தன, பாலஸ்தீனத்தைப் போலவே ஈழத் தமிழர்கள் மீது இலங்கையின் அரச படைகளை இன வெறியாட்டம் நடத்த ஏவி விட்டுப் பார்த்திருந்தது சிங்களம்.

இன்று இஸ்ரேல் படைகளின் கொடூரத்தின் விளைவுகள் குறித்து சர்வதேச மன்றத்தில் நீலிக் கண்ணீர் வடிக்கும் இலங்கை, அன்று அதே கொடூரத்தை தனது மக்கள் மீது கோரத்தாண்டவமாகப் புரிந்தது.

அடுத்தது -

நேற்று அணிசேரமான நாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இன அமைப்பு மாற்றப்படக் கூடாது என்று வலியுறுத்துகின்றார்.

ஆனால் அவரது பௌத்த - சிங்கள பேரினவாத அரசும், அதன் படைகளும் இலங்கையில் ஈழத் தமிழர்களின் தாயகப் பிரதேசத்தின் இனக்கட்டமைப்பு பரம்பலைத் தலைகீழாக மாற்றி, அதனை பௌத்த - சிங்கள மயப்படுத்தும் குடியேற்ற திட்டங்களையே வல்வந்தமாக இன்று - இப்போது வரை - முன்னெடுத்து வருகின்றன.

மத்திய கிழக்குக்கு ஒரு நீதி, நியாயத்தை உரைக்கும் இலங்கை அரசுத் தலைமை, தன்நாட்டில் அதற்கு மாறாக நடக்கின்றது.

அதன் உபதேசம் ஊருக்குத்தான். தனக்கு இல்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது.



# நோர்வே பல்கலை மாணவர்களால் கண்டி ரயில் நிலையப் பகுதி துப்புரவு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த நோர்வே பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் அதிகம் பயணிக்கும் கண்டி ரயில் நிலையத்தை சுத்தம் செய்யும் பணிகளில் ஈடுபட்டனர். இந்தச் செயற்பாடு எமது நாட்டு மக்களுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.



# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமானாறு, செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் அதன் முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது.

இதில் மகா பாரதம் தொடர்பான சொற்பொழிவை ஆசிரியர் இரா செல்வ வடிவேல் நிகழ்த்தியதை தொடர்ந்து யாழ். இராமநாதன் மகளிர் கல்லூரி மாணவி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவி, அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை மாணவன், கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஆகியோருக்கு அவர்களது கல்விக்கான உதவியாகச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில்சந்நிதியான்ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை நிர்வாகிகள் உறுப்பினர்கள், ஆச்சிரம தொண்டர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சாய்ந்தமருதில் மீள திறக்கப்படுகிறது மீனவர்களின் தொடர்பாடல் நிலையம்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட மீனவர்கள், படகு உரிமையாளர்கள் மற்றும் இயந்திர படகு உரிமையாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவசரமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் எஸ்.ஜே. கஹவத்த சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மற்றும் மீனவ படகு உரிமையாளர்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பணிப்பாளர் நாயகத்துக்கு விளக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிஸ், கடலில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் தொடர்பாடலுக்கான வயர்லஸ் தொழில்நுட்ப மத்திய நிலையம் சாய்ந்தமருதில் கடந்த காலங்களில் இயங்கி வந்த விடயத்தையும் அந்த மத்திய நிலையம் இப்போது இயங்காது மூடப்பட்டுள்ள விடயத்தையும் விளக்கினார்.



அந்த நிலையத்தை நவீன தொழில்நுட்ப சாதனங்களை நிறுவி மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். அதனை ஏற்றுக்கொண்ட கடற்றொழில் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அடுத்த மாத இறுதியில் மீண்டும் அந்த மத்திய நிலையத்தை இயக்கத் தேவையான சாதனங்களை நிறுவி மீள திறக்க தான் உடனடி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



# திருமலை கச்சக்கொட்டித்தீவு வீதிக்கு காப்பெட் இடும் பணிகள் ஆரம்பம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிண்ணியா , கச்சக்கொட்டித்தீவு – மாகமாறு வீதிக்குக் காப்பெட் இடும் பணி திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கால் வியாழக்கிழமை (18) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இந்த வீதியில் பயணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர். இந்த வீதிக்குக் காப்பெட் இடப்படுவதால் இலகுவாக தமது நாளாந்த பணிகளை மேற் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.





# வாழைச்சேனை பிரதேசத்தில் மூக்குக் கண்ணாடி விநியோகம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகத்தின் சமூக சேவை பிரிவினரால் இலவச கண் பரிசோதனையும் மூக்கு கண்ணாடி விநியோகமும் இலவசமாக நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோஸ்தர்களும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.



# பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் அவசர சேவை பிரிவு கட்டடம் கையளிப்பு!

(நூருல் ஹுதா உமர் )

பொத்துவில் ஆதார வைத்திய சாலையில் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அவசர சேவை பிரிவுக்கான கட்டடத் தொகுதி உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இலங்கை தேசிய கட்டடங்கள் திணைக்களத்தால் 20 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் புதிய கட்டடத் தொகுதி உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம் மாஹிர் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பொத்துவில் ஆதார வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கார்த்திகேயனால் ஒழுங்கு படுத்தப்பட்ட இந்த நிகழ்வில் வைத்திய சாலையின் வைத்தியர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் சீன செயற்றிட்டத்தின் மூலம் நடைபெறும் கட்டுமான பணிகளையும் குறித்த குழுவினர் பார்வையிட்டனர்.




# வொலிவேரியன் பிரதேச மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கல்!

(நூருல் ஹுதா உமர்)

சீரற்ற காலநிலையால் மழை, வெள்ளம் மற்றும் வான்கதவுகள் திறப்பு காரணமாக சாய்ந்தமருது வொலிவேரியன் கிராமத்தின் ஒரு பகுதி வெள்ள நீரில் மூழ்கியிருந்தது.

இந்தப் பிரதேசத்தில் வசித்த மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் பல்வேறு உதவி வழங்கும் நிறுவனங்களாலும் தனி நபர்களாலும் சமைத்த உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

தற்போது வெள்ளம் வடிந்துள்ள நிலையில் இந்தப் பிரதேசத்தில் வசித்த குடும்பங்களுக்கு சாய்ந்தமருது கலாச்சார மண்டபத்தில் வைத்து மாளிகா மீன் மொத்த வியாபார மற்றும் நலன்புரி சங்கம் உலர் உணவுப் பொதிகளை வழங்கியது.

# மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் சுகாதாரப் பணிப்பாளர் கண்காணிப்பு!




(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர், மல்வத்தை பிரதேச வைத்தியசாலையில் சுமார் 1.5 மில்லியன் ரூபா நிர்மாணிக்கப்பட்டுவரும் விடுதிக் கட்டடத்தை பார்வையிட்டனர். அத்துடன் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஒப்பந்தக்காரரையும் கலந்தாலோசனையும் செய்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன், திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம் மாஹிர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களும் குறித்த கள விஜயத்தில் இணைந்து கொண்டனர்.

நிகழ்வில் வைத்தியசாலையின் நீண்டநாள் தேவையாக இருந்த குளிரூட்டி வழங்கப்பட்டது. ஞாபகார்த்தமாக மரமொன்றையும் பணிப்பாளர் நட்டு வைத்தார்.

மல்வத்தை பிரதேச வைத்திய அதிகாரி அவர்களின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# 13 கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு 20 ஆண்டுகளாகக் காணி ஆவணமில்லை

(கே.வசந்தன்)

வவுனியாவில் 13 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 20 ஆண்டுகளாகத் தமக்குக் காணி ஆவணம் வழங்கப்பட வில்லை என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா, ஊர்மிளா கோட்டம் பகுதியில் உள்ள முன்பள்ளி ஒன்றில் ஒன்று கூடிய 13 கிராம மக்களும் தமது ஆதங்கத்தைப் பதாதைகளாக காட்சிப் படுத்தியதுடன், பொங்கல் நிகழ்விலும் ஈடுபட்டனர்.

இதன்போதே தமது ஆதங்கங்களை இவ்வாறு பதிவு செய்தனர். அம் மக்கள் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த

இருந்த அரச சார்ப்பு இயக்கங்களால் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு 11 கிராமங்களில் 385 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

இந்தப் பகுதியில் மக்கள் குடியேற்றம் செய்யப்பட்டு 30 வருடங்கள் கடந்த நிலையிலும் மகளுக்கான காணி ஆவணங்கள் வழங்கப்படாமையால் வீட்டுத் திட்டம், மலசலகூடம் என்பன முறையாக வழங்கப்படவில்லை. வீதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் குறித்த கிராமங்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் இங்கு வாழும் மக்கள் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். கிராமங்களும்

யுள்ளனர்.

அந்த வகையில், காத்தான் கோட்டம், ஊர்மிளா கோட்டம், இராமையன்கல், பிரமானலங்குளம், நெளுக்குளம், அம்பிகைபாலன் கோட்டம், தட்சன் குளம், அருவித்தோட்டம், ஈசன்குடியிருப்பு, புதியவேலர் சின்னக்குளம், தாஸ் கோட்டம், சேகர் கோட்டம், குகன் நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளனர்.

இதன்போது, இந்தப் பகுதிக்கு மாவட்ட அபிவிருத்தி குழுக்களின் பிரத்தியேக செயலாளர் டினேஸ், ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னித் தொகுதி அமைப்பாளரின் பிரத்தியேக





# அயோத்தி ராமர் கோயில் கருவறையில் வைக்கப்பட்ட குழந்தை ராமர் சிலையின் புகைப்படம் வெளியானது

உத்தர பிரதேசம், அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழா நாளை மறுநாள் நடைபெறுகிறது. இதையொட்டி குழந்தை ராமரின் சிலை நேற்று முன்தினம் மாலைகோயில் கருவறையில் நிறுவப் பட்டது.

4.5 அடி உயரம், 200 கிலோ எடை கொண்ட குழந்தை ராமர், வலது கையில் அம்பையும் இடதுகையில் வில்லையும் ஏந்தி நிற்கிறார்.

தலையில் தங்க கிரீடம் உள்ளது. சிலையின் தோரணத்தில் கிருஷ்ணரின் 10 அவதாரங்களும் நேர்த்தியாக செதுக்கப்பட்டு உள்ளன.


குழந்தை ராமர் சிலையின் கண்கள் மஞ்சள் துணியால் மூடப்பட்டிருக்கும்





புகைப்படம் நேற்று முன்தினம் வெளி யானது. இதைத் தொடர்ந்து குழந்தை ராமரின் முழு உருவச் சிலை புகைப்படம் நேற்று முதன்முறையாக வெளியானது. இந்த புகைப்படம் சமூகவலைதளங்களில் பரவி வருகிறது.

# ராமர் கோயில் நினைவு அஞ்சல் தலை: பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார்



அயோத்தி ராமர் கோயில் நினைவு அஞ்சல் தலையை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர்கோயில் எதிர்வரும் 22 ஆம் திகதி திறக்கப்பட உள்ளது.

இந்த நிலையில், ராமர் கோயில், கணபதி, ஹனுமன், ஜடாயு, கேவத்ராஜ் மற்றும்மா ஷாப்ரி ஆகிய 6 நினைவு அஞ்சல் தலைகளை பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இதுபோல அமெரிக்கா, சிங்கப்பூர், கனடா, நியூசிலாந்து உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்ட நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள கடவுள் ராமர் அஞ்சல் தலைகள் அடங்கிய புத்தகத்தையும் அவர் வெளியிட்டார்.

48 பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகம், உலக அளவில் ராமர் பிரபலமாக உள்ளார் என்பதை எடுத்துரைக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளி யிட்டுள்ள காணொலி செய்தியில்,

”அஞ்சல் தலைகள் வெறும் காகிதத் துண்டோ அல்லது கலைப்படைப்போ அல்ல, அவை காவியங்கள் மற்றும் சிறந்த கருத்துகளின் ஒரு சிறிய வடிவம் ஆகும். ராமர், சீதை மற்றும் ராமா யணம் மீதான ஈர்ப்பு என்பது, சமூகம், சாதி, மதம் மற்றும் பிராந்தியம் என அனைத்து எல்லைகளையும் தாண்டி அனைவரையும் இணைக்கிறது.

ராமாயணம் அன்பின் வெற்றி என்ற செய்தியை சொல்வதுடன் மனிதகுலத்தை இணைக்கிறது. மிகவும் கடினமான தருணத்திலும் தியாகம், ஒற்றுமை மற்றும் துணிவு ஆகியவற்றையும் கற்பிக்கிறது.

அதனால்தான் இந்த காவியம் உலக ளாவிய ஈர்ப்பு மையமாக விளங்குவதுடன், எல்லா இடங்களிலும் மரியாதையுடன் பார்க்கப்படுகிறது.” – என்றார்.

# அ.தி.மு.கவில் இணைந்தார் நடிகை காயத்ரி ரகுராம்

கடந்த ஆண்டு பா.ஜ.கவில் இருந்து விலகிய நடிகை காயத்ரி ரகுராம், எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் நேற்று முன்தினம் அ.தி.மு.கவில் இணைந்தார்.

நடிகையும், நடனக் கலைஞருமான காயத்ரி ரகுராம் பல ஆண்டுகளாக பா.ஜ.கவில் செயல்பட்டு வந்தவர். தமிழக பா.ஜ.கவில் வெளிநாடு மற்றும் பிறமாநில தமிழ் வளர்ச்சிப் பிரிவு தலைவராகவும் இருந்து வந்தார்.

இந்தச் சூழலில், கடந்த ஆண்டு ஜன வரியில், கனத்த இதயத்துடன் பா.ஜ.கவில்




இருந்து விலகுவதாகவும், விசாரணைக்கு வாய்ப்பு கொடுக்காத பெண்களுக்கு சம உரிமையும் மரியாதையும் கொடுக் காத காரணங்களுக்காக தமிழக பா.ஜ.க வில் இருந்து விலகுகிறேன் என்று அறிவித் திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, சமூக வலை தளங்களில் தமிழக பா.ஜ.கவையும், அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணா மலையையும் விமர்சித்து வந்தார்.

இந்த நிலையில், நேற்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் தன்னை அக்கட்சியில் இணைத்துக் கொண்டுள்ளார். இதனை அ.தி.மு.க. தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் சிடிஆர் நிர்மல்குமார் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# நிலவில் விண்கலத்தை தரையிறக்கியது ஜப்பான்!



ஜப்பானின் விண்கலமான "ஸ்லிம்" நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், நிலவில் வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கிய ஐந்தாவது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றுள்ளது.

நிலவை ஆய்வு செய்வதற்காக "ஸ்லிம்" என்ற விண்கலத்தை கடந்த செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி ஜப்பான் விண்ணுக்கு ஏவியது.

நிலவை 120 முதல் 180 நாள்களில் இந்த விண்கலன் அடையும் வகையில் அதன் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது.

அந்த நாட்டின் தனேகஷிமா விண்வெளி மையத்தில் இருந்து ஸ்லிம் எனும் ஸ்மார்ட் லேண்டர் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த பணியில் ஜப்பான் விண்வெளி ஆய்வு மையத்துக்கு அமெரிக்காவின் நாசா நிறுவனம் உதவியுள்ளது.

இதனிடையே, நேற்று வெற்றிகரமாக ஸ்லிம் விண்கலம் நிலவின் மேற்பரப்பில் தரையிறக்கப்பட்டதுடன் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இந்தியாவுக்கு அடுத்த படியாக நிலவில் வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கிய ஐந்தாவது நாடு என்ற பெருமையை ஜப்பான் பெற்றுள்ளது.

நிலவின் மேற்பரப்பில் 100 மீற்றர் பரப்புக்குள் தரையிறங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதால் இந்த விண்கலம் 'நிலவின் ஸ்னைப்பர்' என அழைக்கப்படுகிறது.

மேற்படி விண்கலம் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டாலும் அதன் லேண்டர் விரைவாக சக்தியை இழந்துள்ளதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

விண்கலத்தின் சூரிய மின்கலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யாததால், அதன் பணி முன்கூட்டியே முடிவடையும் என்ற அச்சம் உள்ளது. எனினும், தற்போது லேண்டருடன் தொடர்பு கிடைத்துள்ளதாகவும் ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# காசா பல்கலைக்கழகத்தை குண்டு வைத்து தகர்த்தது இஸ்ரேல்

## விளக்கம் கேட்கிறது அமெரிக்கா

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் கடந்தாண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி தாக்குதல் நடத்தினர். இதனால் காசா மீது இஸ்ரேல் போர் தொடுத்தது. இந்த யுத்தத்தில் இஸ்ரேல் தரப்பில் இதுவரை 1,140 பேரும், காசாவில் 24 ஆயிரத்து 620 பேரும் உயிரிழந்தனர்.

காசாவில் இஸ்ரேல் இராணுவம் தாக்குதலை தொடர்வதால், காசாவில் வசித்த 85 சதவீத மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்கி அத்தியாவசியப் பொருள்கள் போதிய அளவில் கிடைக்காமல் கஷ்டப்பட்டு வருகின்றனர்.

அவர்களது உடல் ஆரோக் கியமும் பாதிக்கப்பட்டு வருகிறது. பலர் மஞ்சள் காமாலை பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். அவர்களுக்கு அவசர உதவி தேவை என உலக சுகாதார நிறு வனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தெற்கு காசாவின் பல பகுதிகளில் இஸ்ரேல் இராணுவம் தனது தாக்குதலை தொடர்ந்து வருகிறது. ஹமாஸ் அமைப்பினர் இருக்கும் கான் யூனிஸ் பகுதியில் இஸ்ரேல் இராணுவம் பீரங்கி தாக்குதல், வான் வழி தாக்குதலை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அல்-அமல் மருத்துவமனை அருகே நடைபெற்ற தாக்குதலில் ஒரே இரவில் 77 பேர் உயிரிழந்தனர் என பாலஸ்தீன செஞ்சிலுவை அமைப்பு தெரிவித்துள்ளது.



இந்த நிலையில் காசாவில் உள்ள பாலஸ்தீன பல்கலைக்கழக வளாகம் குண்டு வைத்து தகர்க்கப்படும் காணொலி காட்சி சமூக ஊடகங்களில் வைரலாக பரவியது.

கட்டடத்துக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்து சிதறுவதுபோல் அந்த காணொலி காட்சி உள்ளது. ஆட்கள் இல்லாத இந்த கட்டடத்தை தகர்த்தமை தொடர்பில் இஸ்ரேலிடம் அமெரிக்கா விளக்கம் கேட்டுள்ளது.

காசாவுக்கு எதிரான போரில் இஸ்ரேலுக்கு தேவையான ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள்களை அமெரிக்கா வழங்கியது. அதனால் கைவிடப்பட்ட பல்கலைக்கழக வளாகத்தைதகர்த்தது ஏன் என அமெரிக்கா கேள்வி எழுப்பியுள்ளது.